From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C.No. 548/19

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : பசுபதி | Father/Husband Name | : பழனிச்சாமி |
| Age | : | Calling | : |
| Date | : 06.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06 day of 05.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் கிடாரிபட்டியில் குடியிருந்து வருகிறேன், விவசாய வேலை செய்கிறேன். வாகன விபத்து வழக்கு என்று தெரியும், கிடாரிபட்டியில் நடந்த விபத்தில் எனக்கு தெரந்த, விழி பெயரைடைய பெண்னுக்கு விபத்தால் காயம் ஏற்பட்டது என்று தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது மாதிரி உள்ளது. **( அந்த முதலாவது சாட்சி கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யயப்படுகிறது).** அந்த கையொப்பத்தை சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே உள்ள எனது கடையில் வைத்து கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பானையில் உள்ள கையொப்பம் மாதிரிதான் கையொப்பம் செய்வேன் என்றால் ஆமாம். என்னிடம் கையொழுத்து வாங்கியதில் போலீசார் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் வேறு யாரும் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கடைக்கு முன்பாக பேருந்து நிறுததத்திற்கும் முன்பாகவும், பின்பாகவும் இரண்டு வேக தடை உள்ளது என்றால் சரிதான்.